விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 பங்குனி 23 ஐ ஆகிர் 10 இதழ் 52

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 5—4—82

பணக்காரருக்கு

புத்தாண்டு

நற்செய்தி!

PAALAN

பார்க்க - பக்கம் 4

2764

### அரசு கூட்டணி சந்திப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும்கூட்டணிக்குமிடையிலான உயர்மட்டப் பேச்சுக்கள் இன்று மாலை ஜனாதிபதிமாளிகையில் தொடர்ந்து நடைபெறும்.

இன்று இடம்பெறும் சந்திப்பில், ஊர்காவல்படை அமைப்புப் பற்றிய தீர் மா ன ங் க ள் மேற்கொள்ளப்படும்.

### சூருவளி 30 பேர் பலி

வாஷிங்டன் ஏப் 4

அமெரிக்காவில் தொடர்ச்சியாக வீசிய சூருவளியினுல் 30க்கு அதிகமானேர் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

# தலைமன்னர் - இராமேஸ்வரம்

# புதிய கப்பல் சேவை

## இம் மாதம் 26ல் ஆரம்பம்

### வாரத்தில் மூன்று நாட்கள் நடைபெறும்

(கொழும்பு)

தலைமன்ருருக்கும் இராமேஸ்வரத்துக்குமிடையே புதியகப்பல் சேவை இம்மாதம் இருபத்து ஆரும்திகதி ஆரம்பித்து வைக்கப்படும்.

இக்கப்பல் சேவை, வாரத்தில் மூன்று தினங்கள் நடைபெறும் என்று அறிவிக்கப் ப ட் டு ள் ள து.

தலைமன்ருருக்கும் இ ரா மேஸ்வரத்துககுமிடைசிய இப்பொழுது வாரத்தில் மூன்று நாட்கள்(செவ்வாய், வியாழன் சனி) கப்பல் சேவை நடைபெறுகிறது.

புதிய கப்பல் சேவையும் வாரத்தில் மூன்று நாட்கள் (திங்கள், புதன், வெள்ளி) நடைபெறும்.

தனியார் நிறுவனமொன்றினல் நடத்தப்படும் இக்கப்பல் சேவை மூலம் கப்பல் பிரயாணிகளின் அசௌகரியங்கள் குறைவதுடன், பிரயாணிகளின் நெருக்கடியும் பெருமளவு தீர்க்கப்படும் எ ன் று எதிர்பார்க்கப்படுகிறது.

கப்பல் சேவையை ஆரம்பிக்கும் இத்தனியார் நிறுவனத்தில் அண்மையில் ஓய்வுபெற்ற உயர் பொலிஸ் அதிகாரியும் மே ற் கு ஜெர்மனிப் பிரஜை ஒருவரும் மற்றுமொரு இலங்கையருமாக மூவர் பொறுப்பாக உள்ளனர். (இ)

### கூட்டணிபாராளுமன்றக் குழு கூடுகிறது

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் பாராளுமன்றக் குழுக் கூட்டம் இன்று கொழும்பில் நடைபெறும்.

மாவட்ட ரீதியிலான

## ஆசிரியர் பற்றுக்குறை; இன்று ஆராயப்படும்

(கொழும்பு)

24 கல்வி மாவட்டங்களைச் சேர்ந்த கல்விப்பணிப்பார்களுக்கான கூட்டம் ஒன்று இன்று காலை கல்வி அமைச்சில் நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சர் திரு.ரணில் விக்கிரமசிங்க இதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

இக்கூட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள ஆசிரியர் பற்ருக்குறை பற்றிய விபரங்களைச் சமர்ப்பிக்குப்படி கல்விப் பணிப்பாளர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

ஆசிரிய சேவையில் மேலும் ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்ளும் முகமாகவே இக் கூட்டம் கூட்டப்படுவதாகத் தெரியவருகிறது.

(கரவெட்டி நிரு.)

### ஆர்ஜன்டைன எச்சரிக்கை

லண்டன், ஏப். 4

போக்லண்ட் தீவுகளை மீண்டும் கைப்பற்ற பிரிட்டிஷ் அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை எதிர்த்துப் போராட விருப்பதாக ஆர்ஜன்டைன அதிபர் எச்சரித்துள்ளார்.

### சில்லாலை கொலைச் சம்பவம்:

## சந்தேக நபர் 2500 ரூபா பிணையில்செல்ல அனுமதி

(மாவிட்டபுரம்)

சில்லாலை கொலைச் சம்பவம் குறித்து றிமாண்டிலிருந்த சந்தகநபர் 2500 ரூபா உறுதிப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சில்லாலையைச் சேர்ந்த பிரான்சிஸ் சுகுணராஜா என்பவர் கோடரி வெட்டுழகிலக்காகி கோரமாகக் சொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக அதேயிடத்தைச் சேர்ந்த ஜோசெப் சார்ள்ஸ் மரியான் எனபவர் கைதாகி மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

அத்துடன் இவருச்கு மனநோய் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டதையடுத்து நீதிபதியின் உத்தரவின்பேரில் அங்கொடை மனநோய் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

நேற்று மீண்டும் இதர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் இவர் குறித்த வைத்திய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.இவருக்கு மனநோய் இருந்ததாகவும், அதற்கு சிகிச்சையளிக்கப்பட்டதாகவும், தற்போது குணமடைந்துள்ளதாகவும் அவ்வறிக்கை தெரிவித்தது.

இதனையடுத்து சந்தேக நபரை பிணையில் விடுமாறு கோரப்பட்டசமயம் கொலைச் சந்தேகநபருக்கு பிணைவிட இந்நீதிமன்றத்திற்கு அதிகாரமில்லையென நீதிபதி தெரிவித்தார்.

சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர்.ஜே. செல்வரத்தினம் சந்தேக நபர் மனநோயால்பீடிக்கப்பட்டிருந்ததை வைத்திய அறிக்கை ஊர்ஜிதம் செய்கிறது. ஆகவேமனநோயாளியான அ வ ர் மீ து கொலைக் குற்றம் சுமத்தமுடியாது. அப்படியாளுல் கைமோசக் கொலைக் குற்றம்தான் சுமத்தமுடியும். அக் குற்றத்திற்கு பிணைவழங்க இந்நீதிமன்றத்திஞல் முடியும்.ஆகவே இவரைப் பிணையில்விட வேண்டும்'' என வாதிட்டார்.

இறுதியில் நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் . சந்தேக நபரை 2500 ரூபா உறுதிப் பிணையில் செல்ல அனுமதித்துதார்.

## இளம் எம். பி. மீது தொடர்ந்து விசாரணை

### சுங்கப்பகுதியினருக்கு விசேட அதிகாரம்

(கொழும்பு)

தங்கக் கடத்தலில் சம்பந்தப்பட்டதாகக் கூறப்படும் மலையகத்தைச் சேர்ந்த இளம் எம்.பி. மீது கட்சிமட்டத்தில் தொடர்ந்து விசாரணை நடைபெற்றுவருகிறது.

பாராளுமன்றத்தில் வயதில் குறைந்த எம்.பியான இவர் ராஜினுமா செய்யவேண்டுமென்று ஐ. தே. . உயர்பீடத்தால் பணிக்கப்பட்டபோதிலும் நேற்றுவரை இவர் ராஜினுமா செய்யவில்லை.

இதற்கிடையே, சுங்கப் பகுதியினருக்கு இப்பொழுது விசேட அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சந்தேகிக்கப்படும் சகலரையும்சுங்கப்பகுதியினர்சோதனையிடலாம் என்றும் சர்வதேச விமான நிலையத்தில் அல்லது துறைமுகத்தில்எம்.பி.க்களது உடமைகள் சுங்க அதிகாரிகளின் சோதனைக்குள்ளாக்க அனுமதிக்கவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது. (இ)

உ

### திருமண அழைப்பு

இன்ப அன்பினீர்,

நாளைமறுதினம் புதன்கிழமை (1982.04.07) மாலை 6.45 முதல் 7.45 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில், யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் எனது திருமண வைபவத்தில் கலந்துகொள்ள தங்களை அன்புடன் அழைக்கின்றேன்.

தாழையடி ஒழுங்கை
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.
1982.04.05

அன்புடன்,
சு. மகாலிங்கசிவம்
(மாலி)
'ஈழநாடு'

2767

# பிரபல கொள்ளையர்கள் வவனியாவில் கைது!

(வவனியா)

இராணுவப்பாணியில் இலங்கையின் பல பாகங்களிலும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட பிரபல கொள்ளையர்களை வவுனியா பொலிசார் தமது திடீர்வேட்டையில் மடக்கிப்பிடித்துள்ளனர்.

ஆர். எம். சந்திரசேஞ, (பொலநறுவை), ஜோசப் மகேந்திரன் (கிளிநொச்சி) டபிள்யூ தர்மதாச(வவனியா) எச். சுகதபால (பாவற்குளம்) ஆகிய நால்வருமே பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டவர்களாவர்.

இவர்கள், சிறைச்சாலையிலிருந்தபோது நண்பர்களாகி விடுதலை செய் ய ப் ப ட் ட பின்னர் கூட்டாகச்சேர்ந்து பிரபல கொள்ளைச்சம்பவங்களில் ஈடுபட்டுள்ளனர் என்று விசாரணையில் தெரியவந்தது.

வவனியா பூந்தோட்டம் எனும் இடத்தில் ஒரு வீட்டில் ஒரு பெண்ணுடன் இருந்தபோது இவர்களை பொலிசார் கைதுசெய்தனர்.

பூந்தேட்டம் காட்டில் இவர்கள்குடிசை அமைத்துமறைந்து வாழ்ந்தனர் என்றும்விசாரணைகளின்போது தெரியவந்தது

இத்திடீர்வேட்டையில் வவனியா உதவி பொலிஸ் அத்தியட்சகர் திரு. எஸ். பி. ஏ. ரெட்டி கம்மன, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பியசேன பெரேரா சப்-இன்ஸ்பெக்டர் திரு. அந்தனி காஸ்ன் டபிள்களான ரி. அசோகா, எஸ். கணேஷ் ஆகியோர் உட்படப்பலர் ஈடுபட்டிருந்தனர்.

### மணிவாக்கு

எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணிக் கொண்டே
இரந்திரந்தைந்தெழுத்தைப் பன்னிக் கொண்டே
ஔவியம் பொறுமை கோபம் அகற்றிக்கொண்டே
ஆண்டவனைக் கண்டுதெளிந்தாடுமயிலே.

—யோகசுவாமிகள்

# நமது நோக்கு

## ஆங்கிலம் இரண்டாம் சுயம்வரம்?

தந்தை செல்வா ஞாபகார்த்த சொற்பொழிவைக் கேட்டுவிட்டு வந்த சிலர் தாம் கொள்ளுப்பிட்டி (கொழும்பு) 'லிபட்டி' படமாளிகையில் தரமான ஆங்கிலப் படம்பார்த்த அனுபவத்தை நினைவு கூர்ந்தனர்.

கொழும்பு மாநகர் பிரமுகர்கள் ஆங்கிலப்படமென்றால் அங்குதான் அள்ளுப்படுவது வழக்கம். ஆனால் எவரும் கால்நடையில் அல்லது பஸ்வண்டியில். அங்கு போவதில்லை. எல்லோரும் காரிலேயே போவார்கள்.

அது ஒருசட்டமல்ல; ஆங்கிலப்படத்தை ரசிக்கும் எல்லோரும்காரில்போகும்வசதியுடையவர்களும் அல்ல. அவர்களில் எத்தனையோ பேருக்கு குறிப்பிட்டபடம் மிக நன்றாகப் புரியலாம். ஆனால் அவர்கள் அந்தப்பிரபுத்துவ வகுப்பைச் சேர்ந்தவர்கள் அல்ல.

ஆங்கிலம் படித்த செல்வந்தராகிய உயர்மட்டத்தினரே அந்தப் படமாளிகைக் குரித்துடையவர். அதே மாதிரி ஆங்கிலம்படித்த உயர்மட்ட மோட்டார் வாகன வசதியுடைய ஒரு சிலரே தந்தைசெல்வநாயக ஞாபகார்த்த பேருரைகளைக் கேட்கமுடிந்ததென்று நாம் முன்னே குறிப்பிட்ட அன்பர்களின் கவலைதோய்ந்த முறைப்பாடு.

தனிச்சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் விவாதித்தபோது, தமிழின் பெருமையையும் இனிமையையும் ஆங்கிலத்தில் ஒரு சங்கீத கதாப்பிரசங்க பாணியில் பல தமிழ் எம். பீ.க்கள் நடத்திய ஞாபகம் எமக்குண்டு.

அவர்களிற்பலர் தமிழில் பாண்டித்தியமில்லாத போதும் தங்கள் சிங்களச் சகோதரர்களுக்கு தமிழின் இனிமையை ஆங்கிலத்தில் 'வெளுத்துவாங்கிய' வீரம் அன்று பேசப்பட்டது.

சிங்களமக்கள் மத்தியில் எழுந்த 'சிங்கள மோகம், தமிழர்களையும் தங்கள் மொழிக்குத் துதிபாட உதவியது.

தாய்மொழியில் கல்வியென்றதும், சிங்களம்தமிழ் மாணவர்கள் மேல் திணிக்கப்படுமோ என்ற அச்சம் எழுந்தது; உயர் கல்வியாவது சிங்களத்தில் இருக்க வேண்டும் என்று ஒரு பிரமுகர் சிபாரிசு 'பண்ணினதும் அதனை நடைமுறைப்படுத்த வழிதேடியதும் நாம் மறந்து போகவில்லை.

இந்த அச்சம் 'எங்கள் தமிழ்' என்ற இயக்கத்துக்கு பலம் அளித்தது: அந்தப் பயம் இதற்குப் பலம், உண்மையில் ஒவ்வொரு மாணவனும் தனது தாய் மொழியிலேயே கல்விகற்று, கற்றவனாக உயரவேண்டுமென்ற நோக்கம் எங்கள் மத்தியில் வேரூன்றிப் பரவியதில்லை. கல்விமான்களில் இந்த உயர்கருத்து ஆங்கிலத்தில் மோகங்கொண்ட சமூகத்துக்கும் அரசாங்க உத்தியோகத்தை நாடிய பெற்றோருக்கும்நம்பிக்கைஊட்டவில்லை.

சிங்களம் வருகுது கவனம் (கோச்வரும் கவனம் என்பதுபோல்) என்ற அச்சத்திலே எழுந்த 'தமிழ் தமிழ்' என்றகோஷம், இன்று 'இங்கிலிஷ்' என்ற இந்த ஆட்சியின் தாரகமந்திரத்தில்கரையில் அடிபட்டு அமரும் கடல் அலைபோல் அமர்ந்துவிட்டது.

எனவே கொழும்பு தொட்டு மற்றெல்லா நகரங்களிலும், நாட்டுப்புறங்களிலும் ஆங்கிலம் கொடியேறிவிட்டது. ஆங்கிலச் சில்லறைக். கடைகள் ஊரெங்கிலும் அநேகம்!

சிங்களம் அரச மொழியாக உறுதிபெற்றுக் கல்வியிலும், நிர்வாகத்திலும் நடைமுறைப்படுத்தி இறுக்கம்பெற்றுவிட்டது. தமிழ் மக்களின் 'தமிழ்' என்ற கூக்குரலை அடக்குவதற்கு அவர்கள் உண்மையில் விரும்பும் ஆங்கிலத்தை அரியாசனத்திற்குக் கொண்டு வருவது நல்ல உபாயம் என்று அரசு நினைக்கிறது.

நாடு முழுவதிலுமே உயர்கல்வி ஆங்கிலம் இல்லாமைக்கெட்டுப் போய்விட்டது என்ற ஒரே ராகத்தில் பலரும், பல பத்திரிகைகளும், வானொலிகளும் 'கச்சேரி' நடத்துகின்றன. சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் தேவையான இந்த ஆங்கிலத்தையே இந்த நாட்டை ஆளும் ஒரு குறிப்பிட்ட தொகை கொண்ட செல்வந்தக் குடும்பங்கள், உயர் உத்தியோகத்தர்கள், செல்வாக்கு உடைய ஒரு கூட்டத்தினர் விரும்புகின்றனர். வரவழைக்கின்றனர்.

இலவசக் கல்வியால், தாய்மொழிக் கல்வியால் பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்ததால் தங்கள் செல்வாக்கிழந்த இந்தக் கூட்டத்தினர் ஆங்கிலத்துக்கு இரண்டாம் சுயம்வரம் நடத்தத் திட்டமிட்டு வெற்றி காணலாமெனக் கனாக் காண்கின்றனர்.

ஜனநாயகம் இந்த நாட்டில பேணிப் பாதுகாக்கப்படவேண்டுமென்றால், இரு வேறு உலகில் மக்கள் வாழ்வதென்று கருதுகிறார்கள். —பட்டணத்தாரும் பட்டிக் காட்டாரும்!

ஆங்கிலத்துக்கு 'விஸ்கி'. சுயபாஷைக்கு கசிப்பு! ஆங்கிலத்தில் கல்வி கற்பதால் இயற்கை விவேகம் விருத்தியடைவதில்லை. உயர் கல்விக்கு ஆங்கிலஅறிவு வேண்டும் என்பதைச் சாட்டாக வைத்து நாட்டின் அரசியல் கல்விப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயலும் எந்த ஆட்சியையும் விடயம் புரிந்துகொள்ளும் மக்கள் என்றுமே ஆதரிக்கமாட்டார்கள்.

இந்த 'ஆங்கில' சதிக்குத் துணைபுரிபவர்கள், திறந்த பொருளாதாரக் கொள்கை, கல்வி, மருத்துவம், போக்குவரத்து போன்ற அத்தியாவசியமான சேவைகளில் தனியார்துறையை ஆதரிப்பவரே!

மக்கள் ஆட்சி செல்வந்தர் ஆட்சியாக இன்னும் இருப்பதாலேயே கற்பனைக் கெட்டாதளவில் தொழிற்பாகுபாடு, ஊழல், மோசடி குற்ற அதிகரிப்பு போன்ற குறைகள் மலிந்திருப்பதும், ஏழைகளின் துன்பங்கள் வரவரக் கூடுவதுமாக இருக்கின்றன.

இந்த நிலைமையில் 'ஆங்கிலமே' எங்கள் வியாதிகளுக்குச் சர்வரோக நிவாரணி என்போர் யாரென்பதை இனங் கண்டறிக! ஆங்கிலம் மூலம் இன ஒற்றுமை கண்டு சுமுகமான ஆட்சி நடத்தலாமென்று நினைப்பது பகற்கனவு.

# தட்சணாமூர்த்தி

**டாக்டர் டி. எம். பி. மகாதேவன்**

வண்ணார் பண்ணை ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் தேர்த் திருவிழா இன்று நடைபெறுவதை முன்னிட்டு இக் கட்டுரை வெளிவருகிறது.

ஆதிசங்கரர் பல தோத்திரங்கள் இயற்றியுள்ளார். அவற்றுள் 'தட்சிணாமூர்த்தி தோத்திரம்' தென்முகக் கடவுளைப் போற்றுதல் மூலமாக அத்வைத உண்மைகளைப் போதிக்கும் ஓர் அரிய நூல். பரம்பொருள் தட்சிணாமூர்த்தி வடிவத்தில் ஆலின் கீழ் அமர்ந்து மௌனமாய் சின் முத்திரையைக் காட்டி சனகர் முதலிய முனிவர்க்கு உபதேசம் செய்கின்றது. 'எல்லாம் தன்மயம்' என்ற பேருண்மையைத் தென்முகமூர்த்தி போதிக்கும் அற்புதத்தை வியந்து, அதேமூர்த்தியின் அவதாரமாகிய சங்கரர் இத்துதியில் போற்றிப்பாடுகிறார். ''ப்ரத்யபிக்ஞா தரிசனம்'' என்ற காச்மீர சைவத்தின் பரிபாஷைக் உரிய சில சிறப்புமிக்க சொற்களையும், அந்த தரிசனத்தின் சில கருத்துக்களையும் இத் தோத்திரத்தில் காணலாம். ஆனால் இங்கு உபதேசிக்கப்படுவது சுத்தமான அத்வைதம். பத்து சுலோகங்கள் கொண்ட இத் தோத்திரத்தின் மூன்றாம் சுலோகத்தின் பொருள்பற்றிச் சிறிது சிந்திப்போம்.

இந்த சுலோகத்திற்கு பகவான் ஸ்ரீரமண மகரிஷிகள் அருளிய தமிழாக்கம்.

''எவனொளி யுண்மை யின்மை
யியை பொருளிலங்குநேரே
யெவனது நீயானு யென்றி
சைத்து
ணர்த்துவன் சேர்ந்தோரை
யெவனை நேர் காணின் மீண்டு
மிப்பவக் கடல்வீழ் வில்லை
தவருறு குருவாம் அந்த
தக்ஷிணாமூர்த்தி போற்றி''

எவனது உண்மையாயுள்ள பிரகாசம் பொய்யாய்த்தோற்றும் பொருள்களில் விளங்குகின்றதோ, எவன் தன்னை யாசிரயித்தவர்களுக்கு ''தத்த்வம் அஸி'' என்ற வேதவாக்கால் தத்துவபோதம் புரிகின்றானே, எவனைப்பிரத்யட்சமாகக் கண்டபிறகு மறுபடியும் சம்சார சாகரத்தில் விழுவதில்லையோ, தவத்தினரடையும் அந்தக் குரு தட்சிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

உள்ள பொருள் ஒன்றே; அது ஆத்மா. பிரபஞ்சம்எனப்படுவது ஆத்மாவின்தோற்றம்; எவ்வாறு பாம்பு கயிற்றின் தோற்றமோ அதுபோல, பிரபஞ்சத்தில் அடங்கிய பல்வேறு பொருள்கள் உண்மையிலே உள்ளதாகவும், விளங்குவதாகவும் நாம் எண்ணுகிறோம். ஆனால், உண்மையும் விளக்கமும் ஆத்மாவினதே. அல்லாமல் பிரபஞ்சப் பொருள்களினுடையவை அல்ல. அதாவது ஆத்மாவின் உண்மைக்கும் விளக்கத்துக்கும் வேறாக, பொருள்களுக்கு உண்மையோ விளக்கமோ கிடையாது. எவ்வாறு அலை, குமிழிமுதலியவை நீரினும் வேறானவை அல்லவோ, அதேபோல ஆகாசம் முதலிய பொருள்கள் ஆத்மாவைவிட வேறு அல்ல. அவற்றின் பிரகாசம் ஆத்ம பிரகாசத்தின் பிரதிபலனமே. காரியம் காரணத்திற்கு வேறாக இருப்பதில்லை. எப்படிக் குடம் முதலிய காரியங்கள் மண் முதலியவற்றினும் வேறெல்லவோ அப்படி அகாசம் முதலிய பொருள்கள் ஆத்மப் பிரகாசத்தினின்றும் வேறானவையல்ல.

இவ்வுண்மை ஏன் நமக்குப் புலப்படுவதில்லை? ஏன் நாம் பிரபஞ்சத்தை உண்மை என்று மதிக்கின்றோம்? அஞ்ஞானம் ஞானத்தை மறைக்கின்றது. ஆகையால் உண்மையை நாம் உணர்வதில்லை. உண்மைக்கு மாறாக பார்க்கப்படும் பொருள்கள் உண்மை யென்றும் நாம் ஒவ்வொருவரும் தனித்தனி உயிர்கள் என்றும் பிரமிக்கின்றோம். வேற்றுமை வியவகாரங்கட்கெல்லாம் அஞ்ஞானமே மூல காரணம். ஆகாசத்தைக் கூறு

(7ம் பக்கம் பார்க்க)

### இன்று ரதோற்சவம்

# ரதமேறி அருள் சுரக்கும் இணுவை சிவகாமி அம்மை

பங்குனி மாத மஹோற்சவம் இணுவையூரில் ஓர் தனிச் சிறப்புடன் விளங்குவதாகும். நவநராத்திரிநாயகியாக விளங்கும் அபிராமி அன்னையாம் சிவகாமியம்மை சித்திரத் தேரில் பவனிவரும் காட்சி எம்மூர் மக்களுக்கு பெறற்கரிய ஓர் காட்சியாகும்.

இம்மைக்கும், மறுமைக்கும், ஏழேழுபிறப்புக்கும் மனிதனைத் தூய்மைப்படுத்துவது இறையுணர்வாகும். ஆணவப்பிணிப்புடைய மனிதன் இறையுணர்வால் தணலிடைப்பட்ட மெழுகாகின்றான். இதனால் ஒளி உண்டாகி மற்றவர்க்குப் பயனுடையதாகின்றது பிறப்பு. இத்தனையும் உலக மாதாவாகிய அன்னை சிவகாமியிடம் ஒன்றிய ஒவ்வொருவரும் உணர்வதுண்டு.

இணுவையூர் மக்களின் உழைப்பில் பெறப்பட்ட நன்கொடையில் உருவான இச் சித்திரத்தேர் மற்றும் ஆலயங்களிலும் பார்க்கத் தனித்துவமுடையதாகும். அமைப்பு, தோற்றம், உயரம் ஆகியவற்றில் வேறுபட்டுவிளங்குகின்றது.

அம்பாளின் அடியார்கள் பலரும் பல்வேறுபட்ட இயல்பினராயினும் திருப்பணிகளுக்காகக் கூடுமிடத்தில் ஒருமித்த இயல்புடையோராகி, தாமமுடிந்தளவு உதவுகின்றனர்; செயல்படுகின்றனர். இதன் பயனாய் இன்று சித்திரத்தேரில் பவனி வருகின்றாள் அம்மை சிவகாமி. நவசக்தி நாயகியாய் நவகோண அமைப்பில் உருவான தங்க விமானத்தில் நவராத்திரி விழா உற்சவத்திற்குப்பின் அன்னை இன்று பவனி வருகின்றாள்.

**தி. சி. சண்முகலிங்கம்,**
**கே. எஸ். ஆனந்தன்**
(இணைச் செயலாளர்கள் திருப்பணிச் சபை)

தேவரும் மூவரும் காணவொண்ணுத் தேவியை, சிவகாமி அன்னையை, அவள் நிகழ்த்திய அற்புதங்களையெல்லாம் கண்டும், கேட்டும் மெய்மறந்த இணுவையூர் சின்னத்தம்பிப் புலவர் 'சிவகாமி அந்தாதி ஊஞ்சல் பாட்டுப் போன்று பல ஆக்கங்களை வழங்கியுள்ளார்.

'பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய இருள்நீக்கச் சிந்தமுவு சைவநெறித் திருநீற்றின் ஒளிவிளங்க அரந்தை கெடப் புகலியர்கோன் அமுது செய்யத் திருமுலைப்பால் சுரந்தளிந்த சிவகாமசுந்தரி பூங்கழல் போற்றி' என்றுதுதித்தால் எம் வல்வினைபோம், துன்பம்போம் இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை.

### மறக்கமுடியாத திருநாள்

இந்நாள் எங்களைப் பொறுத்தளவில் ஒரு மறக்கமுடியாத திருநாளாகும். எங்களை மட்டுமின்றி உலக மக்களின் அன்னையாகவிளங்கி உலகெலாம் உய்விக்கவழிகாட்டும் அன்புநாயகியாம் சிவகாமியம்மை பல அற்புதங்களை நிகழ்த்தி, விஞ்ஞானம் மேலோங்கி நிற்கும் இக் காலத்திலும் மெய்ப்பொருளாக, அஞ்ஞான இருளகற்றும் ஒளிவிளககாக விளங்கி இளைஞர்கள், பெரியோர்கள் எல்லோரையும் தன் திருத்தொண்டில் பங்குகொள்ளும் வண்ணம் ஆட்டுவித்து அருள் பாலிக்கின்றாள். அன்னையின் திருவருள்பெற்று எல்லோரும் இன்புறுவோம்.

—சி. சிதம்பரநாதன்
சட்டத்தரணி
(தலைவர்)

### தனிச்சிறப்பு

பரிபாலகர் திரு. மு. சிவலிங்கம் கூறுகிறார்:

சிவகாமி அன்னையின் தேர்த் திருவிழா இக்கிராமமக்களின் வாழ்வில் மறக்கமுடியாத பொன்னாள். சமீபத்தில் உருவாக்கப்பட்ட சித்திரத்தேர் இவ்வாலயத்தின் வரலாற்றில் ஒரு பொற்காலத்தினைத் தோற்றுவித்துள்ளது. இவ்வூர் மக்கள் சிவகாமி அம்மைபால் கொண்டுள்ள பக்திக்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

மகோற்சவ காலங்களிலும் மற்றும் உற்சவ காலங்களின் போதும் திருப்பணிச்சபையுடன் இளைஞர்களும் சேர்ந்து ஆலயநிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற உதவுவது தனிச் சிறப்பாகும். அன்னையின் அருள் எல்லோருக்கும் கிட்டுவதாக.

### தில்லை நடராசசுவாமி

பொருளார் திரு. செ. மதியாபரணம் கூறுவதாவது:

அன்னை அறிவாள் அவள் மக்களின் குறை. மக்கள் அறிவார்கள் அன்னையின் அருளின் நிறைவை. அவளுக்குக் குறையில்லை. ஆனாலும் எமது மன ஆசைகளை நிறைவு படுத்தி எமது அன்னை சிவகாமியை அலங்கார பூஜிதையாகக் காணவிரும்பி ஓர் பிரமாண்ட

(8ப் பக்கம் பார்க்க)

# போக்லண்ட் தீவுகளிலிருந்து ஆர்ஜன்டீன வெளியேற வேண்டும்!

## ஐ. நா. பாதுகாப்புச் சபை தீர்மானம்

நியூயோர்க், ஏப். 4

போக்லண்ட் தீவுகளில் இருந்து ஆர்ஜன்டீன துருப்புக்கள் வெளியேற வேண்டுமென்று ஐ. நா. பாதுகாப்புச் சபை தீர்மானித்துள்ளது.

ஆர்ஜண்டீன துருப்புக்கள் கடந்த வெள்ளிக்கிழமை போக்லண்ட் தீவுகளைக் கைப்பற்றி தனது இராணுவத் தலைவரொருவரை கவர்னராகவும் நியமித்திருந்தது.

போக்லண்ட் தீவுகள் 1833ம் ஆண்டுமுதல் பிரிட்டனின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்தது.

தென் அத்லாந்திக் பிரதேசத்திலுள்ள ஆர்ஜன்டீன தீவுக்கு பிரிட்டனின் கடற்படைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பிரதமமந்திரி திருமதி மாகரட் தட்சர் பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

ஆர்ஜன்டீனவுக்கு சொந்தமாக பிரிட்டனிலுள்ள சொத்துக்கள் தடுத்துவைக்கப்படுமென்றும், அந் நாட்டிற்கான பிரிட்டனின் கடன்உதவிநிறுத்தப்படுமென்றும் அவர் அங்கு தெரிவித்தார்.

பிரிட்டனுக்கு சொந்தமான போக்லண்ட் தீவுக்கு இன்னொரு நாடு உரிமை பாராட்ட முடியாதென்றும் அவர் கூறினர்.

போக்லண்ட் தீவு பிரச்னைக்கு சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வொன்று காணப்பட வேண்டுமென்றும், பிரிட்டிஷ், ஆர்ஜன்டீன துருப்புக்கள் அங்கிருந்து வெளியேற வேண்டுமென்றும் இந்தியா தெரிவித்துள்ளது. (வெ)

## போக்லன்ட்டுக்கு விரையும் விமானந்தாங்கிக் கப்பலில் இளவரசர் அன்ட்ரூ!

லண்டன், ஏப். 4

போக்லண்ட் தீவுகளுக்கு பிரிட்டன் அனுப்பிவைத்திருக்கும் தனது கடற்படைப் பிரிவின் பெரிய விமானந்தாங்கிக் கப்பலில் எலிசபெத்மகாராணியின் இரண்டாவது புதல்வரான அன்ட்ரூவும் ஒரு அதிகாரியாகக் கடமையாற்றுகின்றார்.

22 வயதான இளவரசர் அன்ட்ரூ சர்ச்சைக்குரிய போக்லண்ட் தீவுகளுக்குபிரிட்டனின் கடற்படையுடன் செல்வதனை நேற்றுமுன்தினம் பக்கிங்ஹாம் அரண்மனை அறிவித்தது.

இளவரசர் அன்ட்ரூ பூரண கடற்படைப் பயிற்சிகளைப் பெற்றவராவார். அத்துடன் இவர் ஒரு சிறந்த ஹெலிகாப்டர் விமானமோட்டி என்பதும் குறிப்பிடத்தக்கது. (கி)

## அடுத்த மகாநாடு

பாக்தாத், ஏப். 3

அணிசேரா நாடுகளின் உச்சி மகாநாடு முன்னர் அறிவித்ததுபோல எதிர்வரும் செப்டெம்பரில் ஈராக் நாட்டின் தலை நகரான பாக்தாத்தில் நடைபெறும் என்று ஈராக் அமைச்சர் ஜனப் அப்தல்கானி அப்துல்கபூர்அறிவித்துள்ளார்.

ஹவானா மகாநாட்டில் பங்குபற்றிய அநேக நாடுகள் பாக்தாத்தில் நடைபெறவுள்ள மகாநாட்டுக்கான அழைப்பை ஏற்றுள்ளன வென்றும், ஈராக்குடன் மோதிவரும் அணிசேரா இயக்கநாடான ஈரான் மட்டும் இதுவரை அழைப்பை ஏற்கவில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (கி)

## ஊர்காவல் படைஅமைப்பு

(கொழும்பு)

ஊர்காவல் படைக்குப் பொறுப்பான பாதுகாப்புப் பிரதி அமைச்சர் திரு. மேர்வின் குலரத்னவை கலாநிதி நீலன் திருச்செல்வம் சந்தித்

(5ம் பக்கம் பார்க்க)

## தற்கொலை


[சாவகச்சேரி]

கண்டாவளையில் தபாற்சேவகராகக் கடமையாற்றிய கனகரத்தினம் தளையசிங்கம் [45 வயது[ கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்

சாவகச்சேரிப் பகுதி மரண விசாரணை அதிகாரி திரு. என். தர்மேந்திரன் ன்தலத்திற்குச் சென்று பொலிஸ் கான்ஸ்டபிள் சின்னத்தம்பியின் உதவியுடன் விசாரணையை மேற்கொண்டார். சாட்சிகளாகக் காலமானவரின் மனைவி சரஸ்வதி, மருமகன் த. ஆறுமுகம் ஆகியோர் ஆஜர்செய்யப்பட்டனர்.

மரண விசாரணை அதிகாரி திரு.என்.தர்மேந்திரன் சாட்சியங்களைப் பதிவுசெய்தபின்னர் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## சட்டத்தரணி



(மாவிட்டபுரம்)

ஏழாலை மேற்கைச் சேர்ந்த திரு. கந்தையா அரியநாயகம் உயர் நீதிமன்ற பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரக்கோன் முன்னிலையில் சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்,

ஏழாலை மகாவித்தியாலயம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான இவர் இலங்கை பல்கலைக்கழக பட்டதாரியுமாவார் ஏழாலையைச்சேர்ந்த திரு. கந்தையா தம்பதியினரின் ஏக புதல்வரான இவர் தமது சட்டத்தரணித் தொழிலை மல்லாகம், யாழ்ப்பாணம் சாவகச்சேரி ஆகிய நீதிநிர்வாக வலயங்களில் மேற்கொண்டுள்ளார்.

## தேர்த்திருவிழா

(சரவணை)

புங்குடுதீவின் பெருங்கோவிலாகக் கருதப்படும் கிராஞ்சியம்பதி சிவன் கோவில் தேர்த்திருவிழா நாளை நடைபெறவுள்ளது.

## ஆஸி. - அரபு உறவுகள்

சிட்னி, ஏப். 4

சினய் பிரதேசத்திலிருந்து இம்மாதம் இஸ்ரேலியப்படைகள் வாபஸ்பெறும்போது, அங்கே பல்தேச படை ஒன்று நிறுத்த ஏற்பாடாகியுள்ளது. இந்த் நடவடிக்கை கேம்ப் டேவிட் உடன்படிக்கையைத் தொடர்ந்து ஏற்பட்ட உடன்பாடாகும்.

அமெரிக்கா பிரதான பாத்திரம் வகிக்கும் இப்படையில் அவுஸ்ரேலியாவையும் சம்பந்தப்படுத்துவதற்கான பேச்சுவார்த்தை சிட்னியில் நடைபெற்றுவருகிறது. இதுசம்பந்தமாக அமெரிக்க ராஜாங்க இலாகா பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை நடத்திவருகின்றனர்.

அதேநேரத்தில் ஆஸ்திரேலியா சினயில் நிறுத்தப்படவுள்ள படையில் கலந்துகொண்டால், அது அரபு நாடுகளில் எதிர்ப்பை சம்பாதித்துக்கொள்ளலாம் என்ற அச்சம் தோன்றியுள்ளது. அதனுடன் அண்டை நாடுகளுடனான ஆஸ்திரேலியாவின் உறவுகளும் பாதிக்கப்படலாம் என்றும் கருதப்படுகிறது.

இதற்கிடையே மத்திய கிழக்குக்கு துருப்புக்களை விமானமார்க்கமாக ஆஸ்திரேலியா அனுப்பும்பட்சத்தில் அவற்றின் பிரதேசங்களுடாக செல்லமுடியாதென்று ஆஸ்திரேலியாவுக்கு வடக்கேயுள்ள நாடுகள் அறிவித்துள்ளன. உடனடியாக மலேசியா மறுப்பு தெரிவித்துள்ளது. சிங்கப்பூர் அரசிடம் அங்கே விமானங்களை இறக்க ஆஸ்திரேலியா அமைதி கோருவதை நிறுத்தியுள்ளது. இந்தோனேஷியாவும் மறுப்புத் தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பங்களாதேஷில் ஊழல், மோசடிக் குற்றங்களை விசாரிக்க விசேட நீதிமன்றம்!

டாக்கா, ஏப். 4

பங்களாதேஷில் ஊழல், மோசடிகள், அதிகார துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுகளைப் புரிந்த முன்னாள் அரசியல்வாதிகளை விசாரிக்க மேலும் பல நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை துரிதமாக விசாரிக்கும்பொருட்டே இந்நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளதகா தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் அமைச்சர்கள் இராணுவ நீதிமன்றத்தினாலும், ஏனையோர் விசேட நீதிமன்றங்களினாலும் விசாரணைசெய்யப்படவுள்ளதாகவும் கூறப்பட்டது.

ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட பங்களாதேஷின் இராணுவ நீதிமன்றத்திற்கு ஜனாதிபதி சௌத்திரி தலைமை வகிக்கிறார்.

குற்றவாளிகளாகக் காணப்படுபவர்களுக்கு இந்நீதிமன்றத்தினால் மரணதண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கமுடியும்.

பங்களாதேஷில் ஊழல், மோசடிகள், அதிகாரதுஷ்பிரயோகம் புரிந்ததாக எட்டு முன்னாள் அமைச்சர்கள் இராணுவ அரசாங்கத்தால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (வெ)

## ஈரானில் எதிர்ப்புரட்சி நடவடிக்கை?

பெய்ரூத், ஏப். 5

ஈரானில் அமெரிக்க உளவு சேவை, புதியதொரு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்று 'நியூயோர்க் டைம்ஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

வெளிநாடுகளில் வாழும் ஈரானின் பல்வேறு எதிர்ப்புரட்சிக்குழுக்களை ஒன்றிணைந்து ஈரானின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் தீர்மானத்தை அதனிடமே கொடுத்துவிடுவதுதான் இப்புதிய நடவடிக்கையின் பிரதான நோக்கம் என்று இப்பத்திரிகை எழுதுகிறது.

'துருக்கியிலுள்ள ஈரானிய எதிர்ப்பு ராணுவ அமைப்புக்களின் மீது அமெரிக்க உளவு சேவை தனது விசேட கவனத்தைத் திருப்பியுள்ளது. 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வரையானவர்களைக் கொண்ட ராணுவக்குழுக்கள் துருக்கியில் நிலைகொண்டுள்ளன. இரகசியமான பயிற்சிகள் இவற்றுக்களிக்கப்பட்டுள்ளன. ஷா மன்னரின் காலத்திய் ஈரானின் கடற்படைக் கமாண்டராகவிருந்த அட்மிரல் ஏ. மதானி, ஷா ராணுவத்தின் தளகர்த்தா சபையின் தலைவராகவிருந்த ஜெனரல் பி.அரியானா ஆகியோர் இக்குழுக்களுக்குத் தலைமைவகிக்கிறார்கள்' என்று நியூயோர்க் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

சி. ஐ. ஏ.யிடமிருந்து இக்குழுக்கள் பெருந்தொகைப் பணத்தையும் ஆயுதங்களையும் பெற்றுவருகின்றன. ஈரானில் ஒரு நெருக்கடி ஏற்படும் பட்சத்தில் இந்த ராணுவ அமைப்புக்கள் அந்த நாட்டிற்குள் ஊடுருவும் என்றும் நம்பப்படுகிறது. இதற்கிடையில் அமெரிக்கா வகுத்த திட்டமொன்றும் அண்மையில் அம்பலமாகியுள்ளது. இப்பகுதியில் அமெரிக்காவின் நலன்களைப் பாதுகாப்பதற்கு அமெரிக்க ராணுவம் நேரடியாகவே ஈரானுக்குள் தலையிடுவதே இத்திட்டமாகும். நிலைமை மோசமாகிவிட்டது என்று

[5ம் பக்கம் பார்க்க]

## பாவனையாளரைப் பாதுகாக்கும் புதியதிட்டம் வெற்றியளித்துள்ளது!

(புலோலி)

பாவனையாளர் பாதுகாப்புச் சட்டத்தை மீறிபாவனையாளர்களைச் சுரண்டும் வர்த்தகர்களைக் கண்டு பிடிப்பதற்காக யாழ். உள்நாட்டு வர்த்தகத்திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட புதிய சன்மானம் வழங்கும் திட்டம் வெற்றியளித்து வருவதாக உதவி ஆணையாளர் திரு.எஸ். ரீ. மார்க்கண்டு தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள வர்த்தகர்கள் பலர் பாவனையாளர் பாதுகாப்புச்சட்டத்தை மீறி பாவனையாளர்களைச் சுரண்டுகிறார்கள் என்று யாழ். உள்நாட்டு வர்த்தகத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. மார்க்கண்டுவுக்குக் கிடைத்த பலபுகார்களைத் தொடர்ந்து பாவனையாளர்களைச் சுரண்டும் வர்த்தகர்களைக்கண்டுபிப்டிபதற்கான நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டார்.

பொருட்களைப் பதுக்குவது பொருட்களை வைத்துக்கொண்டு விற்பனை செய்ய மறுப்பது கொள்ளை இலாபமடிப்பது முத்திரையிடப்படாத அளவை நிறுவைக்கருவிகளைப் பாவிப்பது கலப்படம் செய்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்கள் பற்றிய உண்மையான தகவல்களைத் தரும் பாவனையாளர்களுக்குச் சன்மானம் வழங்கப்படுமென்று உதவி ஆணையாளர் அறிவித்திருந்தார். இதனைத்தொடர்ந்து பல பகுதிகளில் பாவனையாளர்கள் இத்திட்டத்தைக் கடைப்பிடித்து வருகின்றார்கள் என்றும் இதனால் பாவனையாளர்களுக்கு பெருநன்மை ஏற்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

## கடனை செலுத்தாத 15,000 பேர் மீது வழக்கு

(கொழும்பு)

மக்கள் வங்கியிடமிருந்து பெற்ற கடனை திருப்பிச் செலுத்தாத 15,000 பேருக்கு எதிராக வங்கி வழக்கு தாக்கல் செய்யவுள்ளது. (லெ)

## இவர்களுக்கும் 'கராட்டே' பயிற்சி

(கொழும்பு)

இலங்கை சுங்க சேவைப் பகுதியினருக்கு தற்காப்புக் கலையான 'கராட்டி' பயிற்சி வழங்கப்படவிருப்பதாக, பிரதம சுங்க சேகரிப்பாளர் திரு. எச். பி. திஸநாயக்கா அறிவித்துள்ளார்.

இதன்படி, ஒன்றுக்கப்பட்ட சுங்க சேவைத்தரம் இரண்டில் வேலைக்கமர்த்தப்பட்ட 48 உத்தியோகத்தர்களுக்கே முதன்முதலாக இப்பயிற்சி வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

கடத்தல் முயற்சிகளில் ஈடுபட்டிருப்போரை சுங்கப்பகுதியினர் அணுகும்போது, சில வேலைகளில் அவர்கள் கடத்தல்காரர்களால் நையப்புடைக்கப்படுகின்றார்களாம். எனவே இத்தகைய சங்கடவேளைகளில் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும்பொருட்டே சுங்க சேவையனருக்கு தற்காப்புக் கலையான 'கராட்டி பயிற்சி' வழங்கப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு, திஸநாயக்கா இப்பயிற்

(5ம் பக்கம் பார்க்க)

# பணக்காரருக்குப் புத்தாண்டு நற்செய்தி!




அகில உலகிலும் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட
''பிக்'' பண்ணமுடியாத பூரண பாதுகாப்பளிக்கும் பூட்டானதும்
**(Unpickable Absolute Security Lock)---**

அதாவது, கள்வர்களால் மட்டுமின்றி பூட்டுத் தொழில் செய்பவர்களால்கூட ஒவ்வொரு பூட்டும் அததற்குரிய திறப்பினலன்றி பொய்த்திறப்பினலோ, வேறு ஏதும் கருவிகளினலோ அப் பூட்டின் இரகசியத்தைக் கண்டுபிடிக்கவோ திறக்கவோ முடியாததும்—

இதுவரை உலகில் எப்பூட்டிற்கும் எவரும் அடைந்திருக்காத மாபெரும் 10,240,000,000,000 திறப்பு மாற்று எண்ணிக்கை (Key Differs) கொண்டதுமான பாலன் லீவர் பூட்டு (PAALAN LEVER LOCK) பொருத்தப்பட்டதும்,

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் சென்ற மாதம் நடைபெற்ற மாபெரும் தொழில் வளர்ச்சிகாண் பொருட்காட்சியில் முதன்முதலாகப் பார்வைக்கு வைக்கப் பெற்று யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர், அபிவிருத்திசபைத் தலைவர், மற்றும் பெரும் தொழிலதிபர்கள், கல்விமான்கள் யாவரினதும் ஏகோபித்த பாராட்டு தல்களைப் பெற்றதுமான

# பாலன்

## PAALAN
## IRON SAFE

## இரும்புப் பெட்டகம்

புத்தாண்டிலிருந்து விற்பனைக்கு வருகின்றது!

**விலை ரூபா 11,350/-**

**அறிமுகவிலை - விசேஷ சலுகை!**

முதல் நூறு (100) பெட்டகங்களுக்கு மட்டும்

**ரூபா 8,650/-**

அறிமுக விலையில் வாங்கி ரூபா 2,700/- இலாபம்பெற விரும்புபவர்கள் இப்பொழுதே ஓடர் செய்து கொள்ளுங்கள்.

பாலன் இரும்புப் பெட்டகத்தின் தனித்துவமான சிறப்பியல்புகளில் சில:

1. உட்பொருத்தப்பட்ட கதவுப் பிணைப்புகள்.
2. நாலாபக்கமும் நகர்ந்து பூட்டிக்கொள்ளும் கடின உருக்குத் தாழ்ப்பாள்கள் ஏழு.
3. தீ, வெடிகுண்டு, துளைகருவி எதிர்ப்புகள் கொண்ட விசேஷ தடை அரண்.
4. ஸ்ரெயின்லஸ் ஸ்டீல் (Stain'ess Steel) முகப்புப்பட்டத்தில் அழகுறப் பொருத்திய பூட்டு, தாழ்ப்பாழ் இயக்கும் கருவிகள்.
5. நவீன அமைப்புடன் கவர்ச்சிமிகு உயர்ரக இருவர்ண சேர்க்கை.

பார்வையிடவும் ஓடர் செய்யவும் இன்றே விஜயம் செய்யுங்கள்

யாழ். நகரின் மிகப்பெரும் வியாபார ஸ்தாபனமும், எங்கள் விற்பனையாளருமான

# எஸ். சின்னத்துரை அன்ட் பிரதர்

39, கே. கே. எஸ். ரேட், யாழ்ப்பாணம்.

தெலிபோன்: 283, 284.

குறிப்பு:
1. எங்கள் தலைமைக் காரியாலயத்திலும் வட்டுக்கோட்டைப் பொருட்காட்சியிலும் அறிமுக விலையில் வாங்குவதற்கு ஓடர் செய்தவர்கள் மீண்டும் ஓடர் செய்யத் தேவையில்லை.
2. ஏற்கெனவே வேறு ரக இரும்புப்பெட்டகங்கள் பாவித்துவரும் பாவனையாளர்களில் பலர் எங்கள் தயாரிப்பான ''பிக்'' பண்ண முடியாத பாலன் லீவர் பூட்டைத் தங்கள் பெட்டகங்களுக்குப் பொருத்தித் தருமாறு விண்ணப்பித்து வருகின்றார்கள். பாலன் லீவர்பூட்டு பாலன் பெட்டகங்களுக்கு மட்டுமேபொருத்தப்படுமேயன்றித் தனியாக விற்பனை செய்யப்படமாட்டாதென்பதைப் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## அகில உலக பகிரங்க சவால்

**பரிசு ரூபா 10,000.00**

உலகின் பல பாகங்களிலும் தயாராகும் திண்டுக்கல் மற்றும் இதர ரக பெட்டகங்களில் பொருத்தப்பட்டுள்ள பூட்டுகளைத் திறப்புத்துவாரத்தினூடாகத் தாழ்ப்பாளை உந்தியவண்ணம் லீவர்களை உயர்த்திப் ''பிக்'' பண்ணுமாப்போல் பாலன் லீவர்பூட்டை ''பிக்'' பண்ண முடியாது என்பதைப் பூட்டுக்கள்பற்றிய பொறியியல் அறிவு இல்லாத சாதாரண மக்களுக்கும் தெளிவுபடுத்தும் வகையில் விடுக்கப்படுகின்றது.—

## அகில உலக பகிரங்க சவால்!

பாலன் இரும்புப் பெட்டகத்தில் பொருத்தப்பட்டுள்ள பாலன் லீவர் பூட்டை ''பிக்'' பண்ணுபவர்களுக்குப் பரிசு ரூபா 10,000.00

குறிப்பு:
1. உலகின் எந்த நாட்டவரும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.
2. பூட்டுத் தொழிலில் பயிற்சியும் திறமையும் உள்ளவர்கள் மட்டும் போட்டிக்கு அனுமதிக்கப்படுவர்.
3. ஒவ்வொரு போட்டியாளருக்கும் பூட்டைத் திறப்பதற்கு 10 நாட்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும்.
4. போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் எழுத்தில் விண்ணப்பிக்கவும்.
5. போட்டி விதிகள்பற்றிய மேலும் விபரங்களும் ஆரம்பிக்கும் திகதியும்விரைவில் அறிவிக்கட்படும்.

## ஏ. சி. பாலன்

பூட்டு, பெட்டக பொறியியலாளர்களும் தயாரிப்பாளர்களும்.

550, கே. கே. எஸ். ரேட்,

யாழ்ப்பாணம்.

# வாக்குரிமையை பாதுகாப்பது இளம் சந்ததியினரின் கடமை!

## - ஜனாதிபதி

(கொழும்பு)

''வாக்குரிமையைப் பேணிப் பாதுகாப்பது இளம் சந்ததியினரின் கடமையாகும். அரசாங்கங்களை மாற்றியமைப்பதற்கு வாக்குரிமையொரு மகத்தான சாதனமாகும். எனவே அரசாங்கத்தைக் கவிழ்க்க எவரும் ஆயுதம்தாங்கிப் போராடத் தேவையில்லை'' என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன இலங்கையில் வாக்குரிமை வழங்கப்பட்ட பொன் விழாவையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்றோருக்கு பரிசு வழங்கும் வைபவத்தில் உரையாற்றுகையில் கூறினார்.

இவ்வைபவம் கொழும்பு சுகததாசாஉள்விளையாட்டரங்கில் நடைபெற்றது. (வெ)

## திருநன்னீராட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ். வண்ணை கன்னாதிட்டி அருள்மிகு காளியம்பாள் திருக்குளிர்ச்சித் திருநன்னீராட்டலும், ஆராதனைகளும் நாளை மறுதினம் புதன்கிழமை காலை நடைபெறும். செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் இரவு ஸ்ரீலலிதா திரிசதிநாம அர்ச்சனையுடன் அலங்கார பூஜையும், பௌர்ணமி தோறும் மாலை ஸ்ரீசக்கரயந்திரமேரு பூஜையும் நடைபெறுகிறது.

## யாருடையது?

(யாழ்ப்பாணம்)

வி. ஜெகநாதன் என்பவரால் யாழ். பூபாலசிங்கம் புத்தகசாலையில்கண்டெடுக்கப்பட்ட கடவுச்சீட்டு ஒன்று (பாஸ்போர்ட்) 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த அத்தாட்சி காட்டிப் பெற்றுக் கொள்ளவும்,

## ''நீதியைக்காப்பதில் ஈடுபடவேண்டும்''

(மாவிட்டபுரம்)

''இன்றைய உலகில் நீதி என்பது எவராலும் அறியமுடியாத பொருளாக இருக்கிறது. எமது பண்டைய இலக்கியங்களில் கூறப்படும் நீதிகளுக்கும் இன்று நாம் காணப்படும் நீதிகளுக்குமிடையே வேறுபாடிருப்பதை காண்கிறோம். ஆகவே நீதியைக் காப்பதில் சட்டத்தரணிகள் பெரும் பங்கு கொள்ள வேண்டும். தாம் சார்ந்த கட்சிக்காக வாதாடும் அதே நேரத்தில் உண்மை நீதியையும் நிலைநாட்ட வேண்டியது அவர்களது கடமையாகும்'' என்று புதிய சட்டத்தரணியாகி சத்தியப்பிரமாணம் செய்துகொண்ட ஏழாலை மேற்கைச் சேர்ந்த திரு. க. அரியநாயகத்திற்கு யாழ். நகரில் அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் திரு. சி. சக்திகிரீவன் பேசுகையில் கூறினார்.

திரு. ஆ. குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் சட்டங்கள் ஏட்டளவில் இருக்கின்றபோதும் அதனை நடைமுறைப்படுத்துவதில் தான் சிக்கல்கள் ஏற்படநேரிடுகிறது. சட்டங்களை நீதியை நிலைநாட்டுவதில் சட்டத்தரணிகள் பெரும் பங்கு வகிக்க வேண்டும்'' என்றார்.

## இவர்களுக்கும்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

சியை வழங்குவது பற்றித் தெரிவிக்கையில், ஆழ்கடலில் கடத்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருப்போரை சோதனையிடச்செல்லும்போது, மற்றும் சன சஞ்சாரமற்ற இடங்களில் கடத்தல்காரரைச் சோதனையிடும்போதும், சுங்க அதிகாரிகளைக்கடத்தல்காரர்கள் தாக்கி தப்பிவிட முயற்சிப்பர், இவ்வேளையில் அவர்களை மடக்கி, தம்மையும் காக்கும்பொருட்டே கராட்டிப் பயிற்சி சுங்கம் பகுதியினருக்கு வழங்கப்படவிருக்கிறதென்றார்.

'கராட்டிப் பயிற்சி' பெற்ற முதற்பிரிவு சுங்கச்சேவையினர் சகல சுங்கத்திணைக்களங்களிலும் வேலைக்கமர்த்தப்படுவரெனத் தெரிவிக்கப்பட்டது. (கி)

## ஈரானில்...

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி றீகன் கருதியதுடன் இத்திட்டம் செயல்படும் என்று 'லண்டன் சன்டே டைபஸ்' எழுதியுள்ளது.

துருக்கியைவிட, பிரான்ஸிலும் எகிப்திலும் உள்ள ஈரானிய எதிர்ப்புரட்சிக்குழுக்களுக்கும் சி. ஐ. ஏ உதவுகிறதென்றும் முன்னாள் பிரதமர் பக்தியார் தலைமையில் வெளிநாட்டிலுள்ள ஈரானிய அரசாங்கத்தை அங்கீகரிக்குமாறு வாஷிங்டனில் குரல் எழுப்பம்பட்டுவருவதாகவும் மேற்படி பத்திரிகை எழுதியுள்ளது.

# பாடசாலை மதில் அமைப்பதில் பழைய மாணவர் சங்கம்

(நயினாதீவு)

நயினாதீவு மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தினர் பாடசாலையின் அபிவிருத்தி கருதி பல திட்டங்களைத் தயாரித்துள்ளனர். அதன் முதற்கட்டமாக 75,000 ரூபா செலவில் பாடசாலைக்கான சுற்று மதில் அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. செலவின் ஒருபகுதி கொழும்புவாழ் நயினை மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டுள்ளது. பாடசாலை அதிபரும் இச்சங்கத்துக்கு வேண்டிய உதவிகளை வழங்கி வருகின்றார்.

மேற்படி பாடசாலையின் அபிவிருத்தி கருதி பணஉதவி பொருளுதவி அளிக்க விரும்பும் பழைய மாணவர்கள், அபிமானிகள், சங்கத் தலைவர் அல்லது பெரும் பொருளாளருக்கு அனுப்பிவைக்கலாமென்று சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. சுற்றுமதில் கட்டிமுடிந்ததும், இப்பாடசாலையின் முன்னாள் அதிபர்களைக் கௌரவிக்கும்விழா நடைபெறும். பழைய மாணவர் சங்க ஆதரவில் இலவச வகுப்புக்கள் நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்மட்டுள்ளன.


CENTRIC

சென்ட்றிக் விவசாய பம்ப்.



● உலகப் புகழ் றுெபின் பெட்ரல்/மண்ணெண்ணெய் அல்லது யன்மார் டீசல் எஞ்சின் பொருத்தியது.
● நிகர் நிற்க முடியாத எரிபொருட் சிக்கனம். தனித்துவமான தன்னியக்க எரி பொருள் மாற்றும் விசை.
● இடம் மாற்றும் வசதி கொண்ட பாரம் குறைந்தது.
● நிலைத்து நிற்பதற்காக வார்ப்பிரும்பிலும் பித்தளையிலும் உருவானது.
● சென்ட்றிக் - 30 வருடங்களுக்கு மேல் 60,000 பேர் நம்பிப் பாவிப்பது.

விலை: ரூ. 4,750/- முதல்.
$1\frac{1}{2}$'', 2'', 3'', 4'' ரகங்களில் கிடைக்கும்.

Mel Ads

ஜினசேன லிமிட்டெட்,
4, உணுப்பிட்டியா வீதி,
கொழும்பு 2.
தொலைபேசி: 26558/9


# போக்லண்ட் தீவுகளின் பின்னணியில் ....

''போக்லண்ட் தீவுகளை ஆர்ஜன்டைனா படைகள் ஆக்கிரமித்துள்ளன. இவ் ஆக்கிரமிப்பை எதிர்த்து பிரிட்டனின் கடற்படைகள் போக்லண்ட் தீவை நோக்கி விரைகின்றன..''

தொலைக் காட்சியிலும், வானொலியிலும், பத்திரிகைகளிலும் இன்று ஆக்கிரமித்தக் கொண்டுள்ள 'போக்லண்ட்' தீவின் பின்னணி என்ன?

மும்முரமாக அடிபடும் தகவல்களின் பின்னணியில் விளங்கும் மூன்று முக்கிய இடங்களான பிரிட்டன், ஆர்ஜன்டைனா, போக்லண்ட் ஆகியன இன்று உலகின் முழுக்கவனத்தையும் தம்பால் கவர்ந்துள்ளன.

ஆர்ஜன்டைனா தென் அமெரிக்கக் கண்டத்திலே குறிப்பிடத்தக்களவு நிலப்பகுதியைக்கொண்ட ஒரு நாடாக விளங்குகின்றது. போக்லண்ட் தீவுகள் அத்திலாந்திக் சமுத்திரத்தில் ஆர்ஜன்டைனாவிலிருந்தும் 400 மைல்கள் தொலைவில் அமைந்திருக்கின்றது.

பிரிட்டன், போக்லண்ட் தீவுகளிலிருந்தும் 7000மைல்களுக்கப்பால் அத்திலாந்திக் சமுத்திரத்தில் அமைந்திருக்கின்றது

போக்லண்ட் தீவுகள், பிரிட்டனின் சாம்ராஜ்யம் உலகில் பரவியிருந்ததைக் காட்டிக் கொண்டிருக்கும் சிறு காலனித்துவ நாடுகளில் ஒன்றாக அத்திலாந்திக் மகாசமுத்திரத்தில் அமைந்திருக்கின்றது.

1833 ம் ஆண்டு பிரிட்டன், போக்லண்ட் தீவைக் கைப்பற்றி 150 ஆண்டுகளாக இன்றுவரை அதனைத் தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டுள்ளது. ஆனால் ஆர்ஜன்டைனா தனது எல்லையிலிருந்தும் 400 மைல்கள் தொலைவிலேயே இச்சிறுபோக்லண்ட் தீவுகள் அமைந்திருப்பதனால் அவை தமது நாட்டின் ஒரு பகுதியாகவே கணிக்கப்படல் வேண்டுமெனக் கோரி தனது படைப்பிரிவுகளை அங்கு அனுப்பி அதனைத் தன்வசப்படுத்தியுள்ளது.

இவ்வாறு பிரிட்டனின் கட்டுப்பாட்டின்கீழ் இருந்து வரும் ஒரு பகுதியைத் தம்வசமாக்கிக் கொண்டிருக்கும் ஆர்ஜன்டைனாவின் போக்கு ஒரு பிடிவாதமான தொன்றாகவே தென்படுகின்றது. ஒரு லட்சத்து 85 ஆயிரம் பேரைக் கொண்ட ஒரு பலம்வாய்ந்த இராணுவத்தை ஆர்ஜன்டைனா கொண்டுள்ளது.

அதேவேளை உலகின் 5 பெரும் வல்லரசுகளில் ஒன்றாகக் கணிக்கப்பட்டும், அதிநவீன அணுசக்தி படைத்த போர்க்கப்பல்களுடனும் உலகின் சிறந்தகடற்படைப் பிரிவை பிரிட்டன் கொண்டுள்ளது. 3 லட்சத்து 43,650 பேர் பிரிட்டன் இராணுவத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

இவ்வாறு பிரிட்டனின் பெரும் இராணுவபலத்துக்கெதிராக ஆர்ஜன்டைனா தனது இராணுவபலத்தை காண்பித்து போக்லண்ட் தீவுகளுக்கு துணிவுடன் உரிமை பாராட்டுவது மெச்சக்கூடியதொன்றாயினும் அண்மைக் காலங்களில் மத்திய, மற்றும் தெனஅமெரிக்காவின் வடபகுதி நாடுகளுக்கிடையில் ஏற்பட்டுவரும் பிணக்குகளுடன் இப்புதிய பிணக்கும் விகாரமடையும் பட்சத்தில் உலக அமைதிக்குப் பங்கம் விளையுமோ என்பதே அரசியல் அவதானிகளின் அச்சமாகும்.

- அனந்த்

## ஊர்காவல்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

தார்.

ஊர்காவல்படை அமைப்புக் குறித்து கலாநிதி நீலன் திருச்செல்வம் திரு. மேர்வின் குலரத்னவுடன் இச்சந்திப்பின் போது கலந்துரையாடியதாகத் தெரிய வருகிறது.

தமிழர்விடுதலைக்கூட்டணியின் சார்பில் கலாநிதி நீலன் திருச்செல்வம் ஊர்காவல் படைக்குப் பொறுப்பாகவுள்ளார் என்பது தெரிந்ததே.

(இ - வெ)

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம்

மாவட்ட நீதிமன்றம்

சுன்னாகம் என்னுமிடத்தைச் சேர்ந்த காலம் சென்ற இரத்தினம் மகள் இராசேஸ்வரி என்பவரின் மரணசாதனமில்லா மரணச்சொத்துக்களினதும் உடைமைப்பொருள்களினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

மரணசாதன

நியாயாதிக்கம் இல. ரி 99

பூதத்தம்பி கார்த்திகேசு இரத்தினம் கைம்பெண் மகேஸ்வரி, சுன்னாகம்

எதிராக

1. இரத்தினம் மகேந்திரனும்
2. பெண் நவமலரும் எல்லோரும் சுன்னாகம்
3. சிங்கராயசிங்கமும்
4. பெண் இந்திராவும் சுன்னாகம்

எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982ஆம் ஆண்டு சித்திரை மாதம் 28ம் திகதி முற்பகல் 9—00மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளையை ஏன் முற்றனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1981 ம் ஆண்டு மாசி மாதம் 23ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி,

சு. வ. கணேசன்
பதிவாளர்.

தயாரித்தவர்

ஏ. பி. நடராஜன்
மனுதாரின் சட்டத்தரணி.

2712

வெஸ்லி ஸ்ரான்லி
தினசரி: 2.30 6.15 9.15
ரஜனிகாந்த்—சீமா
காளி

யாழ். றீகல்
தினசரி10—30, 2—30, 6—30, 9—30
6.4.82 வரை மட்டுப்
தனிமரம்
8th and 9th
Bradford Vilman in
PIRANHA
(Horror under water—Color film)
நீருக்கு அடியில் பயங்கரச் சம்பவங்கள் நிறைந்தது

மனோகரா (யாழ்ப்பாணம்)
10-30, 2-30, 6-30 9-30
2-4-82—5-4-82 வரை
மாலினி பொன்சேகா நடித்த
ஆ ர ா த ஞ
(சிங்களம் —கலர்)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ்ப்பாணம்) தினசரி 10.30, 2.30 6.15, 9.46
முத்துராமன் சுஜாதா
பேரும் புகழும்
(புதிய பிரதி)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
திருட்டுராமன்

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
பச்சைவிளக்கு

கடைசி 4 தினங்களாக பறந்து கொண்டிருக்கிறோம்.
ராணி யாழ். நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10.30, 2.00, 4.30, 7.00 9.30
Clint Eastwood, Sandra Look in
Grey Lady Down
(Scope — Color)
6—4—82 முதல் THE DEER HUNTER

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
பெண்குலத்தின் பெருமையை விளக்கும் அற்புதமான வண்ணச் சித்திரம்—ஒவ்வொரு பெண்ணுக்கும் ஓர் ஒப்பற்ற படிப்பினையாக விளங்கும் உன்னத காவியம்—திடீர்த் தீர்மானத்தினுல் திரைப்பட நட்சத்திரத்திற்கு ஏற்பட்ட விபரீத முடிவைக் காணத் தவருதீர்—
ஸ்ரீபிரியா—கமல்— ரஜனி— நாகேஷ்—
நடிகர் திலகம் சிவாஜி மற்றும் பல
முன்னணி நட்சத்திரங்கள் நடித்த
★நட்சத்திரம்★

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 23ம் திகதி

திங்கட்கிழமை

(5—4—82)

மேடம்: தெய்வ நம்பிக்கை மேலோங்கி நிற்கும், சிலருக்கு ஆத்மீக விடயங்களில் அதிக ஆர்வம் ஏற்படலாம், பொதுப் பணிகளில் ஈடுபடுவதன் மூலம் பொதுமக்களின் ஆதரவைப் பெறுவர்.

இடபம்: தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும், மேலதிகாரிகளின் பாராட்டுக்களுக்கு இலக்காகுவீர்கள், சிலர் வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணம் ஒன்று மேற்கொள்ளம்படலாம்.

மிதுனம்: பொருளாதார நிலை சீரடையும், சிலர் வாழ்க்கையில் எதிர்பாரத வரவுக்கும் இடமுண்டு பத்திரிகையாளர்களின் வேதனம் உயர்த்தப்படலாம், வெளியூரில் இருந்து செய்திகிடைக்கும்.

கடகம்: வாழ்க்கையில் புதிரான நிலை தென்படும், எதிலும் தாக்க மனப்பான்மை உருவாகும், சிநேகிதர் வளியால் கவலைகள் தோன்றக்கூடும், விவசாயிகளின் ஏமாற்றத்துக்கு இடமுண்டு.

சிங்கம்: முன்னேற்றம் தடைப்படும், குறுக்குவழித் தலையீடு குழப்பத்தை ஏற்படுத்தலாம், எதேச்சாதிகாரப் போக்கால் கொள்ளவும் நேரிடும் அமைதி நன்று.

கன்னி: பிரிந்தவர்கள் மீண்டும் இணைவர், குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான சூழ்நிலை தென்படும், எதிர்பார்த்த சுப காரியம் ஒன்றுக்கு இன்று மதிப்புயரும்.

துலாம்: தற்பெருமைமூலம் தடுமாற்றம் ஏற்படும், கண் துடைப்புவேலை நடக்கும், கவனம் செலுத்தவும், பெரியோரைப் பகைத்துக் கொள்ளாதில் பொறுமையைப் பேணி நடக்கவும்.

விருச்சியம்; அறிஞர் சந்மப்பு இன்று நிகளும் அறவளியில் ஆர்வம் பிறக்கும், ஆக்கப் பணியில் துணிவும் செலுத்தவும், இன்று சுபபோக நாள்,

தனு: கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும், போக்குவரத்து விடயங்களில் அதிக கவனம் செலுத்தவேண்டும், திடீர் திருப்பம் உங்களை திகைக்க வைக்கலாம்.

மகரம்: பகைமூட்டம் தோன்றும், பதட்டல் உடன் சேரும் மிகையான போக்கிலே மிதுனம் பாழாய்ப் போகும்.

கும்பம்: வாழ்கை இன்று மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும் குடும்பத்தில் அமைதி நிலவும், களஸ்திரவளியால் நன்மைகள் சேரும், நீண்டநாள் கனவு இன்று நினைவாதற்கு இடமுண்டு.

மீனம்: அவசரபோக்கினுல் அதிகாரிகளை பகைத்துக்கொள்வீர்கள், எதர்க்கு எடுத்தாலும் ஆத்திரம் ஏற்படும் தவருன வழிமூலம் பணம் பாழாகும்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

ஹரன் யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
புகுந்த வீடு
[புதிய பிரதி]

## தவக்கால நற்சிந்தனை



பரிசுத்தவாரத்தின் முதல் நாளான இன்று ஒவ்வொருவருக்கும் ஓர் அமைப்பு விடப்படுகிறது. கடவுள் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லிஅழைக்கிருர். மகனே, மகளே எழுந்துவா! நீதி அற்ற சமுதாயத்திலே, நிம்மதி அற்ற சூழ்நிலைகளிலே, அமைதி அற்ற உலக வாழ்விலே நீதியையும், அமைதியையும், நிம்மதியையும் நிலை நாட்ட, வாழ்க்கைப்பாதை தெரியாது எப்படியும் வாழலாம் என இருப்போருக்கு இப்படித்தான் வாழவேண்டும். இறைவனுக்காகத்தான் வாழவேண்டும் எனும் தத்துவத்தை கற்றுக் கொடுக்க, கண்இருந்தும் குருடராய், காது இருந்தும் செவிடராய் பாவத்தின் அடிமைத்தனத்தில் வாழ்வோருக்கு விடுதலை பெற்றுக் கொடுக்க இருளில் இருப்போரை ஒளிக்கு அழைத்துச் செல்ல நான் உன்னை அழைக்கிறேன். எழுந்துவா.

—அருட் செல்வன் ரூபன்



யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ். முதல்வர் இராஜா விசுவநாதன் முன்னிலையில் நீராவியடி கிருஷ்ணன் கலைமன்றத்தின் 'இலங்கை வேந்தன்' இசை, நடன, நாடகம் இடம்பெற்றது. அதில் ஒரு காட்சி.

# நயினை தர்மகர்த்தாசபை மீது நம்பிக்கையில்லையாம்

## பொதுச்சபை தீர்மானம்

(நயினுதீவு)

நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் தேவஸ்தான தர்ம பரிபாலன சபைக்குப் புதிய உறுப்பினர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காகக் கூட்டப்பட்ட வாக்காளர் சபைக் (பொதுச் சபை) கூட்டம் அமளிதுமளியில் முடிந்தது.

இதனைத் தொடர்ந்து வாக்காளர் சபை ஆலய தர்மகர்த்தாக்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றியது. சமாதான நீதவான் திரு. க. வே. பரமலிங்கத்தினுல் முன்மொழியப்பட்டுக் கிராமசேவை அலுவலர் திரு. நா. வே. சிவப்பிரகாசத்தினுல் வழிமொழியப்பட்ட இந்நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாக்காளர் சபை ஏகமனதாக ஏற்றுக் கொண்டது.

தற்போதுள்ள ஆலய பரிபாலன சபையினர் 1976ம் ஆண்டு முதல் இன்று வரை கோவிலின் வரவு செலவுக் கணக்குகளைப் பொதுச்சபைக்குச் சமர்ப்பிக்கத் தவறியதாலும், காரியதரிசி அறிக்கை வாசிக்கப்பட்டபோது வரவு செலவு அறிக்கையையும் உட்படுத்தி வாசிக்கும்படி கேட்டபோது, தலைவர் சர்வாதிகாரமான முறையில் அறிக்கையை வாசிக்கமுடியாதென்று கூறி, பொதுச்சபை உறுப்பினர்களுக்கு இதுபற்றிக் கேட்க அதிகாரம் இல்லை என்று கூறியதனுலும், பொது மக்களைப் பேசவிடாமல் தடுக்கும்பொருட்டுப் பொலிசாரை உதவிக்கு அழைக்க முயன்றதனுலும் வாக்காளர் சபை ஆலய தர்மகர்த்தாக்கள் ஐவர் மீது நம்பிக்கையை இழந்து விட்டதாகக் கூறப்பட்டது.

தொடர்ந்து நடைபெற்ற வாக்காளர் சபைக் கூட்டத்தில் மேற்படி நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் இன்னும் பல தீர்மானங்களையும் செயற்படுத்தும் முகமாக நிறைவேற்றுச்சபை ஒன்று ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டது. இச் சபையின் தலைவர்: க. வே. பரமலிங்கம், செயலாளர்: வர்த்தகர் சி. நா. சண்முகநாதன், பொருளாளர்: முன்னுள் கிராம அதிகாரி கா. க. சிவசிதம்பரம். ஏனைய உறுப்பினர்கள்: அ. செ. நல்லையா, இ. சிவபாதசேகரம், ச. பொ. தில்லைநாதன், ப. க. மகாதேவா. நா. வே. சிவப்பிரகாசம், வே. க. கு. கோபால பிள்ளை, இ. சின்னத்துரை, நா. கோபாலகிருஷ்ணன், வ. த. கனகலிங்கம், சி. நா. கணேசு கு. சாந்தலிங்கம். மு. நவரத்தினம் நா. காராளபிள்ளை கோ. வாமதாசன், ஆசிரியர் வே. கந்தையா. (அ)

## புதுவருடப் போட்டிகள்

(நயினுதீவு)

நயினுதீவு விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் புதுவருடத்தையொட்டி நடாத்தப்படும் வருடாந்த விளையாட்டுப் போட்டி இம்மாதம் 15ல் நடைபெறவுள்ளது. இப் போட்டியில் நயினுதீவு விளையாட்டுக் கழகங்கள், சன சமூக நிலையங்கள் பங்குகொள்ளவுள்ளன. போட்டியின் குழுநிலை நிகழ்ச்சிகள் பத்தாம் திகதி ஆரம்பமாகும;

## இன்று மகா சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

தொண்டமானுறு செல்வச் சந்நிதி ஸ்ரீசுப்பிரமணியசுவாமியின் மகா சங்காபிஷேகம், சண்முகார்ச்சனையும் இன்று திங்கட்கிழமை காலை நடைபெறவுள்ளது.

இன்றிரவு விசேட உற்சவமும், அருட்கவி சீ. வி. விநாசித்தம்பியின் 'சரவணத்துள்ளடக்கம்' என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் இடம்பெறும்.

## மண்கும்பான் பிள்ளையார் நாளை கொடியேற்றம்

[யாழ்ப்பாணம்]

மண்கும்பான் பிள்ளையார் கோவில் வருடாந்த உற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. புதுவருடத் தினமான 4ந் திகதி புதன்கிழமை காலை தேர்த் திருவிழாவும், அடுத்த நாள் வியாழக்கிழமை காலை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (அ)

# வரி விளம்பரம்

## பயிற்சி

3 மாத மோட்டார் மெக்கானிக் டிப்பிளோமா பயிற்சி 05—04—82 ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 2724

ஒரு மாத எலக்றிக்கல் வயரிங்—வெல்டிங் டிப்பிளோமா பயிற்சிகள் 06—04—82 ஆரம்பமாகின்றன. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னொலொஜி, 9/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 2725

## விற்பனைக்கு

இனிப்பு இயந்திரம் தளபாடத்துடன் பீட்டிப்போள்ஸ் கட்டர் பெரியது சிறியது விற்பனைக்கு உண்டு. N. சண்முகநாதன், பவர்கவுஸ் வீதி. சுண்ணாகம். 2751

புனரமைக்கப்பெற்ற ஹொண்டா C 90 மோட்டார் சைக்கிள்களும் L/D 5 வானுக்குரிய என்ஜினும் விற்பனைக்குண்டு, நா. சாம்பசிவம் அன் கோ, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 2715

கல்வியங்காடு ராசவீதியில் இரண்டு பரப்புக்காணி நல்ல நிலையில் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: த. கதிரித்தம்பி, புலவனார் வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 2759


## சேவை

பண்ணிசைக் கச்சேரிகள்—ஒலிப்பதிவு தருமபுரம் சுவாமிநாதன், சீர்காழி திருஞானசம்பந்தர், லால்குடிசுவாமிநாதன், முத்துக்கந்தசுவாமி ஓதுவார், சேலம் ஜெயலட்சுமி ஆகியவர்களின் பண்ணிசை ஒவ்வொன்றும் சுமார் ½ மணி ஒலிப்பதிவு செய்து கொடுக்கப்படும். 'துர்க்காஸ்' றெக்கோடிங் (B) பார், 68, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். 2760

## விற்பனைக்கு

L. D. வான், பெட்போட் வான் ஆகியன விற்பனைக்குண்டு. எந்நேரமும் பார்வையிடலாம். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: ஸ்ரீதரன் மரக்காலை, 438, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 2757

**யூனியன்**
250 கிலோகிரேம் மேடை எடை பார்க்கும் இயந்திரம்




மேடை அளவு 622 mm x 403 mm
அதிக பாரமான, இரும்பு சுத்திமுனை இணைக்கப்பட்டுள்ளது.

சாமுவெல் சன்ஸ் அண்ட் கம்பனி லிமிட்டெட்
371, பழைய சோனக தெரு
கொழும்பு 12 தொ. 32341 - 4

2475

**யூனியன்**
தண்ணீர் இறைக்கும் இயந்திரம்
மாதிரி எஸ் பீ 2



நம்பிக்கையானதும் வலுவான இயக்கத்திற்கும். தன்னியக்க பெற்றோல்/மண்ணெண்ணெ இயந்திரம்

சாமுவெல் சன்ஸ் அண்ட் கம்பனி லிமிட்டெட்
371, பழைய சோனக தெரு
கொழும்பு 12 தொ 32341 - 4

2744

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## சாவகச்சேரி நகராட்சிமன்றம்

### நவீன சந்தை மாடிப்படிகளின் கீழுள்ள இடப்பரப்பிற்கான கேள்வி அறிவித்தல்

சாவகச்சேரி நவீனசந்தையில் பஸ் நிலையப்பக்கமும், தனங்கிளப்பு ரோட்டுப் பக்கமும் உள்ள மேல்மாடிப் படிகளின் கீழ் உள்ள இடப்பரப்பிற்கான அரக்குமுத்திரையிடப்பட்ட கேள்விகள் 30—4—82ம் திகதி நண்பகல் 12—00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்: இதற்காக இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் படிவத்திலேயே கேள்விகள் அனுப்பப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் மீளளிப்புச்செய்யப்படாத கேள்விப்பத்திரக்கட்டணமாக ரூபா 50/—ம், மீளளிப்புச் செய்யப்படும் கேள்விப்பிணைப் பணமாக ரூபா 500/—ம், 29—4—82ம் திகதி நண்பகல் 12—00 மணிக்குமுன் செலுத்திப்பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.

ஒவ்வொரு பக்க இடப்பரப்பிற்கும் ஆகக்குறைந்த கேள்வித்தொகை ரூபா 18,800/— ஆகும். குறிப்பிட்ட இடத்தில், பத்திரிகைகள், புத்தகங்கள், சாய்ப்புச்சாமான்கள் மட்டுமே விற்பனவுசெய்ய அனுமதிக்கப்படும்.

இதுபற்றிய மேல் விபரங்கள் இக்காரியாலயத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

சி. க. மயில்வாகனம்
தலைவர்
நகரசபை, சாவகச்சேரி

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
01—4—1982. 2758

## தட்சணாமூர்த்தி...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

போடுவது இயலாது. ஆயினும் எவ்வாறு குடம் என்ற உபாதியைக் கொண்டு குடத்திற்குள் இருக்கும் ஆகாசம் வேறு வெளியில்உள்ளஆகாசம் வேறு என்ற பாகுபாட்டைத் தவறுகச் செய்கின்றோமோ, அதுபோலவே தேகம் என்ற உபாதியை ஆதாரமாக வைத்துக் கொண்டு ஜீவஈசுவர பேதத்தைத் கற்பிக்கின்றோம். பேத புத்தியை நீக்க அஞ்ஞானம் விலக வேண்டும். அஞ்ஞானத்தை அழிக்க ஈசுவரனே குருவாக வந்து ஞானத்தை அருளுகின்றான். 'தத்வம்அஸி' என்ற உபதேசத்தைக் செய்கின்றான். ''அவனே இவன்'' என்னும்போது எவ்வாறு தேசகால வேறுபாடுகளை விலக்கிவிட்டு ஒரே மனிதன் என்று உணரப்படுகின்றானே, அதே போன்று ''நீ அதுவாய் இருக்கின்றாய்'' என்று குரு போதிக்கும போது உபாதிகளை நீக்கி ஆத்மா இரண்டற்றது என்று உணர்கின்றோம். இங்கு இது விசாரிக்கத்தக்கது. அது (தத்) என்ற சொல் ஈசுவரனைக் குறித்தும் ஈசுவரன் நமக்குப் பிரத்தியட்சமாகத் தெரியாத பொருள். பிரபஞ்சத்திற்கு மூலகாரணம்; பேரறிவு, பேராற்றல் முதலிய குணங்களோடு கூடிய கடவுள். ''நீ'' [த்வம்] என்ற சொல் ஜீவனைக் குறிக்கும். ஜீவன் என்பது தேகம் என்ற உபாதியுடன் கூடிய உயிர்; சிற்றறிவு முதலிய குணங்கள் படைத்தது. அவரவர்குப் பிரத்தியட்சமாய்த் தெரிவது. ஈசுவரனும் ஜீவனும் எவ்வாறு ஒன்றாக இருக்கமுடியும்? ''அது—நீ'' என்ற மகாவாக்கியத்திற்குப் பொருள் லக்ஷணையினால் அறியவேண்டும். இரண்டு சொற்களில் ஒவ்வொன்றின் நேர்பொருளில் சேர்ந்துள்ள உபாதிகளை விலக்கிவிட்டு, பொதுவாகவுள்ள ''சைதன்யம்'' [அறிவு] என்றதை மாத்திரம் எடுத்துக் கொண்டால் உண்மை விளங்கும். மகாவாக்கியத்தின், பொருள் விளக்கம் தரும் லக்ஷணைக்கு ''விட்டுவிடாத லக்ஷணை'' என்று பெயர். அதாவது முரணான உபாதிகளை விட்டுவிட்டு பொதுவான சைதன்யம் என்ற பொருளை எடுத்துக்கொள்வது. சுருதி ''ஆத்மை கத்வம்'' [ஆத்மா ஒன்றே] என்ற பேருண்மையை மகாவாக்கியங்கள் மூலம் போதிக்கின்றது. இதற்கு அநுகூலமான யுத்திகளையும் அது கொடுக்கின்றது. விசாரித்துத் தெளிவுற்றபோது இவ்வுண்மையை நாம் நம்முடைய அனுபவமாகவும் கொள்கின்றோம்.

தூல தேகம் முதலிய பஞ்சகோசங்களுக்கு ஆத்மா லக்ஷணமானது. ஆனல், அஞ்ஞானத்தால் ஆத்மாவைத் தேகாதிளோடு ஒன்றுபடுத்தி அதற்குப் பிறப்பு, இறப்பு பேதம் முதலியவை இருப்பதாக நினைக்கின்றோம். குருவருளால் ஞானம்பெற்று அஞ்ஞானம் அழியும் போது அத்விதீய அனுபவத்தை அடைகிறோம் இவ்வநுபவம் குடைத்தபிறகு ஜனன — மரணப் பிரவாகத்தில் சிக்கிக்கொண்டு தவிப்பது கிடையாது. சம்சாரம் இல்லாததாகின்றது. எப்பொழுதுமே உள்ள கைவற்யம் கிட்டுகின்றது. இந்தநித்திய சித்தமான அநுபவத்தை உணர்த்துகின்றது. றிட்சிணாமூர்த்தி தத்துவம்.

- 'திருக்கோயில்'

யாழ். மத்திய கல்லூரி
## புதிய கட்டடத் திறப்புவிழா

மேற்படி விழா 6—4—82 செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

திரு. வெ. யோகேஸ்வரன் அவர்கள் (யா.பா.உ.)

கட்டடத்தைத் திறந்துவைப்பார்கள்.
எல்லோரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள். மாணவர்கள்
கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தினர்.
2747

## லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

இவ்வாண்டு இறுதி (டி. ஏ. எம்.) பரீட்சை 19.4.1982 திட்கட்கிழமை ஆரம்பமாகும். 12.4.1982 நண்பகல் 12 மணி வரை இப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளட்படும்.

விண்ணப்பக் கட்டணம்:

| | |
|---|---|
| முழுப் பரீட்சை | — ரூபா 350/— |
| 1 பாடம் | — ரூபா 100/— |
| மேலதிக ஒவ்வொரு பாடத்திற்கும் | ரூபா 50/— |

127, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பதிவாளர்
2.4.1982. 2748

## வை. எம். சீ. ஏ. இளைஞர் பயிற்சி நிலையம் பரந்தன்

கீழ்வரும் பயிற்சிகளுக்கான விண்ணப்பங்கள் 16க்கும் 23க்கும் இடைப்பட்ட வயதுடைய ஆண்களிடம் இருந்து, 15.04.82ந் திகதிக்கு முன் கோரப்படுகின்றன.

| பயிற்சிகள் | பயிற்சிக்காலம் | பயிற்சிக்கடடணம் |
|---|---|---|
| விவசாயம் | ஒரு வருடம் | இலவசம் |
| தச்சுத்தொழில் | 6 மாதங்கள் | இலவசம் |
| வெல்டிங் | 4 மாதங்கள் | மாதம் ரூபா 400/— முழுப் பயிற்சிக்கும் 1600/— |
| உழவு இயந்திரம் பெட்டியுடன் செலுத்துதல் | 2 மாதங்கள் | ரூபா 600/— முழுப்பயிற்சிக்கும் |

மேற் கூறிய எல்லாம் வாசஸ்தலப் பயிற்சிகள் உணவும் தங்குமிட வசதியும் இலவசம். திருப்திகரமாக பயிற்சிகள் முடிந்து வெளியேறும்பொழுது சான்றிதழ்கள் வழங்கப்படும். உழவு இயந்திர பயிற்சியாளருக்கு சாரதி அத்தாட்சிப் பத்திரம் (LICENCE) பெற்றுக் கொடுக்க ஒழுங்குகள் செய்யப்படும்.

விண்ணப்பப் படிவங்கள் கிடையாது. எழுத்து மூலம் முழு விபரங்களுடன் 15—4—82 ற்கு முன் விண்ணப்பிக்கவும்.

இயக்குநர்: வை. எம். சீ. ஏ. இளைஞர் பயிற்சி நிலையம் பரந்தன். 2736

## தங்க நகைகளுக்கும் தங்க கட்டிகளுக்குமான பணவசதி

**த பினான்ஸ் கம்பனி**
வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக
**தங்க நகைகளுக்கும், தங்க கட்டிகளுக்குமான பணவசதி**
வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:
விற்பனை முகாமையாளர்,

**த பினான்ஸ் கம்பனி லிமிட்.**

249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7680

# ஊர்காவல்படை அமைப்பு: அமைச்சர் - நீலன் சந்திப்பு

## செயல் திட்டங்கள் பற்றி வலியுறுத்தப்பட்டது

(கொழும்பு)

**''பொலிசாருடனும், இராணுவத்தினருடனும் மக்களுக்கு தற்போது நெருங்கிய தொடர்புஇல்லாதபடியால், ஊர்காவல் படையை மக்களுடன் நெருங்கிய தொடர்புடைய முறையில் அமைக்கவேண்டும்.''**

இவ்வாறு கலாநிதி நீலன் திருச்செல்வம் ஊர்காவல் படைக்கு பொறுப்பான அமைச்சர் திரு. மேர்வின் குலரத்தினவை ஊர்காவல்படை அமைப்புகுறித்து சந்தித்த போது கேட்டுக்கொண்டார்.

ஊர்காவல்படையில் அரசியல், இன, மத வேறுபாடுகள் இடம்பெறக் கூடாதென்றும், அப்போதுதான் அவை சமூகத்திற்கு சிறந்த முறையில்சேவையாற்ற முடியுமென்றும்நீதியை நிலைநிறுத்துமென்றும், கலாநிதி நீலன் திருச்செல்வம் இச்சந்திப்பின்போதுவற்புறுத்தினர்.

மாவட்ட அபிவிருத்திசபை தலைவர்கள், எம் பிக்கள் அங்கம் வகிக்கும் கண்காணிப்பு குழுக்களை அந்த அந்த மாவட்டத்துக்கு பொருந்தக் கூடிய முறையில் நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் நீலன் திருச்செல்வம் இச்சந்திப்பின்போது அமைச்சர் குலரத்னவை வலியுறுத்தினர்.

எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் சார்பிலேயே கலாநிதி நீலன் திருச்செல்வம் ஊர்காவல்படையின் அமைப்பு தொடர்பாகஅமைச்சர் மேர்வின் குலரத்தினவை சந்தித்திருந்தார் (இ—வெ)

---

மிருசுவில் கொலை வழக்கு

## ஆஸ்பத்திரியில் காயமுற்ற நிலையில்அனுமதிக்கப்பட்டார்

(சாவகச்சேரி)

''சம்பவதினம் சாவகச்சேரி வைத்தியசாலையில் எனது விடுதியில் இருந்தேன். அப்பொழுது காயப்பட்ட நோயாளி ஒருவரை கொண்டுவந்துள்ளதாக அறிவித்தல் கிடைத்தது. நான் உடனே வைத்திய சாலைக்குச் சென்றேன். அப்பொழுது காலமான சுவாமிநாதன் பத்மநாதன் என்பவர் படுகாயங்களுடன் கொண்டுவரப்பட்டார். அவரைப்பரிசோதனை செய்த பொழுது தலை, நெஞ்சு, வயிறு என்னுமிடங்களில் இரத்தக்காயங்கள் இருந்தன.''

மிருசுவில் கொலை வழக்கில் சாட்சியமளிக்கையில் சாவகச்சேரி உதவி வைத்தியதிகாரி சு. சி. அருளானந்தம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

ஈச்சமோட்டை வாசியாகிய சுவாமிநாதன் பத்மநாதன் என்பவரை மிருசுவிலை சேர்ந்த கஸ்பார், சிவஞானம், அந்தோனிப்பிள்ளை, சூசைபிள்ளை இராசரத்தினம், விவேகானந்தராசா என்பவர்கள் கத்திபொல்லுகளாற் தாக்கிக் கொலைசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

முதல்மூன்று எதிரிகளுக்கும் சட்டத்தரணி திருமதி நிமாலினி அம்பிகைபாலனின் அனுசரணையுடன் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயாவும் மற்றும் எதிரிகளுக்கு சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் ஆஜராகினர்.

உதவி வைத்தியதிகாரி சு. சி. அருளானந்தம் தொடர்ந்து சாட்சிய மளிக்கையில் கூறியதாவது: அந்த நேரம் காலமானவர் பேசக்கூடிய நிலையிலிருந்தார்' என்ன நடந்தது என விசாரித்தேன்- தான் லொறியில் வரும்போது லொறியை நிற்பாட்டிகஸ்ப்பா ஜெபா என்பவர் கத்தியாற் குத்தியதாகக் கூறினர். அவர் வேறு ஒன்றும் கூறவில்லை. நானும் கேட்கவில்லை. நிலைமை மோசமாக இருந்ததால் உடனே வாட்டிக்கு அனுப்பி வைத்தியசாலைக்கு அறிவித்தேன். அவர் வந்து பார்த்து சிகிச்சை அளிக்க முற்பட்ட பொழுது அவர் ஒரு மணி வரையில் இறந்துவிட்டார். அவர் வசமிருந்த பொருட்களை எடுத்து வைத்தியசாலை எழுதுவினைஞரிடம் கொடுத்தேன். அவரது சேட் பொக்கற்றிக்குள் இருந்த துண்டை எடுத்துப் பொலிசாரிடம் கொடுத்தேன் இடு சம்பந்தமாகப் பொலிசாருக்கு வாக்கு மூலம் கொடுத்தேன்.

காலமானவரின் சேட்பொக்கற்றுக்குள் எடுத்த கடதாசித் துண்டில், கஸ்பார் கிறீஸ்துதாசன், புவனேந்திரராசா, ஞானப்பிரகாசம், மரியதாஸ், சிவநேசன், விவேகானந்தன் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயவின் குறுக்கு விசாரணையில் தான் சென்று பார்த்தவுடன் பாரிய காயங்கள் மூன்று இருந்ததாகவும், காயம் எப்படி ஏற்பட்டதென்பதைத் தான்குறிக்கவில்லை எனவும் உதவி வைத்திய அதிகாரி தெரிவித்தார். நீதிபதியின் கேள்வியொன்றிற்குப் பதிலளிக்கையில் அனுமதித்து அரை மணி நேரத்துள் காலமானர் என்ருர்.

ஆனையிறவு உப்புக்கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த நவரத்தினம் யோசெப் விக்ரர் சாட்சியமளிக்கையில்கூறியதாவது: சம்பவதினம் கொலை நடந்த பொழுதுசைக்கிள்கடையொன்றில் தான் நின்றேன், காலை 11 மணிவரையில் பத்மநாதனைக் கொலைசெய்துவிட்டார்கள் என்ற செய்திகேட்டு சம்பவ இடத்திற்கு விரைந்தேன். அங்கு லொறி மாத்திரம்தான் நின்றது. நான் உடனே சாவகச்சேரி வைத்தியசாலைக்குச் சென்றேன். அங்கு அவர் இறந்துவிட்டார்.

---

## மரண அறிவித்தல்

### எஸ். எம். சதானந்தன்

ஆனைப்பந்தி எஸ். எம். சதானந்தன் (சதானந்தன் கொம்பனி கொழும்பு) அவர்கள் 30.3.82ல் கொழும்பில் அகாலமரணமானுர். இவர் காலம்சென்ற திரு. திருமதி மயில்வாகனத்தின் புதல்வரும், மூளாய் திரு. திருமதி கந்தையாவின் மருமகனும் அரசாங்கவைத்தியசாலை (ருகம) நேசத்தின் கணவரும் சசிக்கலாவின் தந்தையும் கமலாம்பிகை, கோபாலபிள்ளை, கருணாநந்தன், மோகனாம்பிகை அவர்களின் சகோதரருமாவார். அன்னாரின் பூதவுடல் திங்கள் (5.4.82) காலை 8.00 மணிக்கு தகனக்கிரிகைகளுக்காக 61/1, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்திலிருந்து வில்லூன்றி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 2765

---

## இப்படியும் நடக்கிறது

அன்று முக்கியமான 'கூப்பன்கடை' நாள்

சங்கக்கடைகள் பலருக்கு இப்பொழுது புளித்துப்போய் விட்டாலும், குறிப்பிட்ட சிலபகுதிகளில், சங்கக்கிளைகளுக்கு நேரகாலத்தில் பொருள்கள் போய்ச்சேர்ந்தால்தான் இந்நாட்டின் 'மன்னர்'களான 'முத்திரை ஜீவன்' களுக்கு கால்வயிறு நிரம்பும்!

யாழ்.மாவட்டத்திலுள்ள அந்த ப.நோ.கூ.சங்கத்துக்கோ லொறிகள் பல இருந்தும் குறிப்பிட்ட முக்கிய நேரத்தில் சில சாரதிகள் தலைமறைவாகிவிடுவதுண்டு. இதன் எதிரொலியகக சங்கக்கிளைகளுக்குப் பொருள்கள் போய்ச்சேர்வதிலும் பல சந்தர்ப்பங்களில் அநாவசியமான தாமதம் ஏற்படுவதுண்டு. அன்றும் இதே நிலைதான்!

லொறிகள் இருந்தும் சாரதிகள் இல்லாத நிலைமையைப் புரிந்துகொண்ட ப. நோ. கூ. சங்க இயக்குனர்சபைத்தலைவர், உடனடியாகவே லொறிச் சாரதியாகமாறி, சங்கக்கிளைகளுக்கு பொருள்களை நேரடியாக விநியோகம் செய்துவிட்டார்!

ஆயிரத்தில் இப்படி எத்தனை பேர்?

'ஊடுருவி'

---

## இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சட்டநாதர்கோவில் சப்பறத் திருவிழாவான இன்று இரவு 'சட்டநாதர் தோழர்'' என்னும் பொருள் பற்றி திரு. ஜீ. ஜீ. லக்ஷ்மி நாராயண சுவாமிஜீ சங்கீத கதாப்பிரசங்கம் செய்வார். வைத்தீஸ்வர சுவாமிகள் வயலினும் வை. நாகேந்திரக் குருக்கள் மிருதங்மும், பெண் பின்னணிப் பாடகர்களாக பல சங்கீத வித்துவான்களும் பங்குபற்றுவர்.

[கு]

---


# ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்

**மக்கள் எதிர்பார்த்திருந்த புதிய உல்லாச பஸ் சேவை**

தினசரி மாலை 8-30 மணி கொழும்பில் இருந்து----யாழ்ப்பாணத்துக்கு

தினசரி மாலை 8-00 மணி யாழ்ப்பாணத்தில் இருந்து-----கொழும்புக்கு

**இன்று முதல் (5-4-1982 திங்கட்கிழமை)**

கண்ணியமான பாதுகாப்பான பஸ்சேவை

யாழ்ப்பாணத்தில் டிக்கற் பெறுமிடங்கள்:-

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்
இல: 82, கன்னுதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 370—438—537

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச் லேன், சாவகச்சேரி.
தொலை பேசி இல; 273. சாவகச்சேரி

கொழும்பில் டிக்கற் பெறுமிடங்கள்

(1) ஹோம் பினன்ஸ் லிமிட்டெட்
463, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190

(2) ரவீந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.

(3) லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல.105, ஒல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல; 22830

(4) ஸ்ரீமணிமலர் ஸ்டோர்ஸ்
இல: 157/2, ஸ்ரீகதிரேசன் வீதி, கொழும்பு—11
தொலைபேசி இல: 23277

(5) நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி. பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல: 88866

**கட்டணம் ரூபா 65-00**


---

## ரதமேறி....

(2ம் பக்க தொடர்ச்சி)

இந்த உயிர் எங்கு சென்றாலும், எப்பிறவி எடுத்தாலும் அங்கும் வந்து மேலான துணையாக இருப்பவள் பராசக்தி. இதையே 'அபிராமி என்றன் விழுத்துணையே' என்று அபிராமிப்பட்டர் கூறுகிறார். இப்படியான சக்திவாய்ந்த அன்னை இணுவிற்கிராமத்தில் சிவகாமி அம்மையாக வீற்றிருந்து நல்லருள் புரிகிறாள். இந்த ஆலயத்தில் நடைபெறும் விழாக்கள் யாவும் மிகவும் சிறப்பு வாய்ந்தது. பங்குனி உத்தரமகோற்சவம், ஆடிப்பூர கற்பூரவிழா நவராத்திரி திருநாட்கள், நவசக்தி அர்ச்சனை விழா ஆகியன அதிசிறப்புடன் நடைபெற்று வருவது அம்பாளது திருவருளேயாகும். மஹோற்சவத்தில இன்று நடைபெறும் தேர்த் திருவிழா அடியார்களுக்குக் கண்கொள்ளாத் திருக்காட்சியாகும். அன்னையைத்தரிசித்து அவளருள் பெற்றுய்வோம்.

## ஐயனர் தேர்

(யாழ்ப்பாணம்)

சுன்னுகம் ஐயனர் கோவில் தேர்த்திருவிழா இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது.

(கு)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் ஏப்பிரல் மீ 5-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper. ...he General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 77 07, 889, 8126.